பாடம் - 6 | الدرس السادس

## சுன்னத்தான நோன்புகள்

## صيام التطوع

பின்வரும் நாட்களில் நோன்பு நோற்பதை நபி(ஸல்) அவர்கள் ஆர்வமூட்டியுள்ளார்கள்.

1.ஷவ்வால் மாத ஆறு நோன்புகள்.

عَنْ أَبِي أَيُّوبَ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ : مَنْ صَامَ رَمَضَانَ ثُمَّ أَتْبَعَهُ سِتًّا مِنْ شَوَّالٍ كَانَ كَصِيَامِ الدَّهْرِ (م/ ١١٦٤)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'யார் ரமழானில் நோன்பு நோற்று அதைத் தொடர்ந்து ஷவ்வாலில் ஆறு நோன்புகள் நோற்றாரோ அவர் காலமெல்லாம் நோன்பு நோற்றவர் போலாவார்.' (முஸ்லிம்-1164)

2.திங்கள், வியாழக் கிழமைகள் தோறும் நோன்பு நோற்பது.

3.ஒவ்வொரு மாதத்திலும் மூன்று நாட்கள். இம்மூன்றையும் 'அய்யாமுல்பீழ்" எனும் வெள;ளை நாட்களில் நோற்றால் சிறப்பானதாகும். அவை 13, 14, 15 ஆகிய மூன்று நாட்களாகும்.

4.ஆஷூரா நாள். இது முஹர்ரம் 10 ம் நாளாகும். யூதர்களுக்கு மாற்றம் செய்வதற்காக அதற்கு முன்பு ஒரு நாள் அல்லது பின்பு ஒரு நாள் சேர்த்து நோற்பது சுன்னத்.

((صِيَامُ يَوْمِ عَاشُورَاءَ أَحْتَسِبُ عَلَى اللهِ أَنْ يُكَفِّرَ السَّنَةَ الَّتِي قَبْلَهُ)) (م/ ١١٦٢)

'ஆஷூரா தினத்தில் நோன்பு வைப்பதால் அதற்கு முந்தைய வருடத்திற்குரிய பாவங்களை அல்லாஹ் மன்னித்தருள்வான் என்று எதிர்பார்க்கிறேன்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்-1162)

5. அரஃபா நாள். இது துல்ஹஜ் மாதம் 9 ஆம் நாள் ஆகும்.

((صِيَامُ يَوْمِ عَرَفَةَ أَحْتَسِبُ عَلَى اللهِ أَنْ يُكَفِّرَ السَّنَةَ الَّتِي قَبْلَهُ وَالسَّنَةَ الَّتِي بَعْدَهُ)) (م/ ١١٦٢)

'அரஃபா நாளில் நோன்பு நோற்பதால் அதற்கு முந்தைய மற்றும் பிந்தைய வருடத்திற்குரிய பாவங்களை அல்லாஹ் மன்னிப்பான் என்று எதிர்பார்க்கிறேன்' என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்-1162)

### நோன்பு தடைசெய்யப்பட்ட நாட்கள்

1.நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் என இரு பெருநாட்கள்.

2.தஷ்ரீக்குடைய மூன்று நாட்கள். அவை துல்ஹஜ் மாதத்தின் 11, 12, 13 ஆகிய நாட்களாகும். ஹஜ்ஜுக் கிரான், ஹஜ்ஜுத் தமத்துஃ செய்பவர்களுக்கு பலிப்பிராணிகள் கிடைக்கவில்லை எனில் அவர்கள் இதிலிருந்து விதிவிலக்குப் பெறுவர். (காரணம் அந்நாட்களில் பரிகாரநோன்புகள் நோற்க வேண்டியுள்ளது.)

3.மாதவிடாய், பிரசவ இரத்தம் வரக்கூடிய நாட்கள்.

4.ஒரு பெண் தனது கணவன் ஊரில் இருக்கும் சமயம் அவன் அனுமதி யின்றி நோன்பு நோற்பது கூடாது. ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ : لَا تَصُومُ الْمَرْأَةُ وَبَعْلُهَا شَاهِدٌ إِلَّا بِإِذْنِهِ غَيْرَ رَمَضَانَ (خ/ ٥١٩٢، م/ ١٠٢٦، د/ ٢٤٥٨) واللفظ له

'ஒரு பெண் தனது கணவன் ஊரிலிருக்கும் சமயம் அவன் அனுமதியின்றி (ரமழான் அல்லாத காலங்களில்) நோன்பு நோற்பது கூடாது.' (புகாரி-5192, முஸ்லிம்-1026)